**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 297** **நாள்: 16.07.2026**

**கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட சைதாப்பேட்டை மயானபூமியில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், பொதுமக்கள் அன்னை சத்யா நகர் மற்றும் கண்ணம்மாபேட்டை மயானபூமியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-139க்குட்பட்ட சைதாப்பேட்டை மயானபூமியில் எரிவாயு தகனமேடையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள உள்ளதால், 17.07.2026 முதல் 05.08.2026 வரை 20 நாட்கள் மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில், பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு-138க்குட்பட்ட அன்னை சத்யா நகர் மயானபூமி மற்றும் வார்டு-141க்குட்பட்ட கண்ணம்மாபேட்டை மயானபூமியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**